| | வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை<br>இணைந்து வழங்குபவர்கள்<br>பிராந்திய வானிலை மையம் சென்னை - இந்திய வானிலைத் துறை<br>ம. சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும்<br>ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம் | | | | | |
|---|---|---|---|---|---|---|
| MSSRF<br>Science for Sustainable Development | மாவட்டம் : | **சிவகங்கை** | காலம் : | **01/05/2024** | முதல் | **05/05/2024** |
| | அறிக்கை எண் : | **035/ 2024** | வெளியீட்டு நாள் : | | **30/04/2024** | |

## சிவகங்கை மாவட்டத்தின் கடந்த வார வானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 39°-40° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 26°-28° செல்சியஸ் ஆகவும் பதிவானது.

| கடந்தவார வானிலை (25.04.2024 முதல் 29.04.2024) | | | | | | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு –05-05-2024- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 25/04 | 26/04 | 27/04 | 28/04 | 29/04 | தேதி | நாள்-1 01/05 | நாள்-2 02/05 | நாள்-3 03/05 | நாள்-4 04/05 | நாள்-5 05/05 |
| 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | மழை (மி.மீ) | 0 | 0 | 0 | 0 | 0 |
| 40 | 39 | 39 | 39 | 40 | அதிக பட்ச வெப்பநிலை (செல்) | 40 | 41 | 41 | 41 | 40 |
| 27 | 26 | 26 | 27 | 28 | குறைந்த பட்ச வெப்பநிலை (செல்) | 28 | 28 | 27 | 27 | 27 |
| 1 | 3 | 3 | 5 | 4 | மேக மூட்டம் (ஆக்டா) | 5 | 4 | 2 | 6 | 3 |
| 66 | 62 | 63 | 69 | 72 | அதிக மற்றும் குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (சதவீதம்) | 70 | 70 | 70 | 70 | 70 |
| 40 | 35 | 36 | 46 | 57 | | 20 | 20 | 30 | 30 | 20 |
| 4 | 9 | 14 | 11 | 7 | காற்றின் வேகம் (கி.மீ/மணி ) | 16 | 18 | 22 | 20 | 20 |
| தென் கிழக்கு | தென் கிழக்கு | தென் கிழக்கு | தென் கிழக்கு | தென் கிழக்கு | காற்றின் திசை | தெற்கு | தெற்கு | தெற்கு | தெற்கு | தெற்கு |

## குறுஞ்செய்தி :

அடுத்த 5 நாட்களுக்கு வறண்ட வானிலையே நிலவ வாய்ப்பு. அதிகபட்ச வெப்பநிலையானது 40°-41° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலையானது 27° - 28° செல்சியஸ் ஆகவும் பதிவாகலாம். வானம் மிதமான மேகமூட்டத்துடன் காணப்படும். மணிக்கு 16 முதல் 22 கி.மீ வேகத்தில், தெற்கு திசையிலிருந்து காற்று வீசக்கூடும்.

## பொது ஆலோசனை:

அதிக அதிகபட்ச வெப்பநிலை மற்றும் மிதமான காற்று காரணமாக ஏற்படக் கூடிய ஈரப்பத இழப்பினை ஈடுசெய்ய பயிர்களுக்கு அதிக அளவில் நீர் பாசனத்தினை மேற்கொள்ளவும்.

**கால்நடை வளர்ப்பு :**

பகல் பொழுதில் காணப்படும் அதிக வெப்பத்தின் காரணமாக ஆடு, மாடுகள் செயற்கை கருத்தரிப்பினை காலையில் 9 மணிக்குள் அல்லது மாலை 4 மணிக்கு பிறகு செய்ய வேண்டும்.

விலங்குகளின் உடலில் நேரடியாக தண்ணீரை தெளிப்பதன் மூலம் வெப்ப அழுத்தத்தில் இருந்து விலங்குகளை பாதுகாக்கலாம். மாட்டு கொட்டகையின் பக்கவாட்டில் (ஓரங்களில்) ஈரமான சணல் சாக்குபைகளை கட்டி விடவும். தாதுக்களுக்கான அதிகரித்த தேவையைப் பூர்த்தி செய்வதற்காக வெப்பமான காலநிலையின் போது விலங்குகளுக்கு அதிகரித்த தாது உப்புச் சேர்க்கையை உறுதி செய்யவும். கால்நடைகளுக்கு குறிப்பாக பொட்டாசியம் நிறைந்த தாதுக்கலவையினை வழங்குவதில் முன்னுரிமை அளிக்க வேண்டும்.

**விவசாயம் :**

மாவட்டத்தின் ஒரு சில பகுதிகளில் அடுத்த 5 நாட்களுக்கு (01.05.2024 முதல் 05.05.2024) அதிகமான வெப்பம் மற்றும் ஈரப்பத்ததுடன் கூடிய அசவுகரியமான வானிலை நிலவ வாய்ப்புள்ளது. எனவே விவசாயிகள் வயல்வெளி வேலைகளை காலை மற்றும் மாலை நேரங்களில் செய்ய திட்டமிடவும். போதுமான அளவு தண்ணீர் குடிக்கும் படியும் மதிய (12 மணி முதல் 4 மணி வரை) நேரத்தில் வயலில் வேலை செய்வதைத் தவிர்த்து பாதுகாப்பாக இருக்கும்படியும் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

அடுத்த 5 நாட்களுக்கு மணிக்கு 16 முதல் 22 கி.மீ. வேகத்தில் காற்று வீசும் என எதிர்பார்க்கப்படுவதால் விவசாயிகள் கரும்பு, வாழை, பப்பாளி, கொய்யா, முருங்கை போன்ற பயிர்களுக்கு மண் அனைத்தல், முட்டுகொடுத்தல், விட்டம் கட்டுதல் போன்ற பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்க்கொள்ளவும். கொடிவகை பயிர்களில் பந்தல்களில் துருபிடித்து பழுதடைந்துள்ள கம்பிகள் மற்றும் தூண்களை கண்டறிந்து சரி செய்யவும். போதுமான முட்டுகளை கொடுக்கவும். பயிர்களுக்கு மருந்து தெளிக்கும் வேலைகளை ஒத்திவைக்கவும்.

**எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்**
**முக்கிய பயிர்கள் : முருங்கை, கொய்யா, கால்நடை**

**முருங்கை:**

முருங்கையில் நல்ல விளைச்சல் பெற செடி ஒன்றுக்கு 45 கிராம் தழைச்சத்து 16 கிராம் மணிச்சத்து, 30 கிராம் சாம்பல் சத்து ஆகியவற்றை விதைத்த மூன்றாவது மாதத்தில் இட்டு நீர் பாய்ச்ச வேண்டும்.

மேலும் ஆறாவது மாதத்தில் தழைச்சத்து மட்டும் ஒரு செடிக்கு 45 கிராம் என்ற அளவில் இடவேண்டும்.

**கொய்யா:**

கொய்யா பழப்பயிரில் பழஈக்களின் தாக்குதல் பரவலாக தென்படுகின்றது. தாக்குதலின் அறிகுறியாக பழ ஈக்களின் புழுக்கள் மற்றும் ஈக்கள் பாதி கணிந்த பழங்களையே தாக்கும். பழத்தின் மீது முட்டையிடுவதற்காக போடப்பட்ட துளைகள் காணப்படும். பழத்திலிருந்து துர்நாற்றம் வீச துவங்கும்.

இதனைக் கட்டுப்படுத்த ஒரு எக்கருக்கு 12 இனக்கவர்ச்சிப் பொறிகள் வீதம் வைக்க வேண்டும் அதாவது 5 லிட்டர் வாளியில் 3 லிட்டர் தண்ணீர், 2 கருவாட்டு துண்டு, 1கிலோ கொட்டமுத்து பிண்ணாக்கு, 50 கிராம் நாட்டு சர்க்கரை, 2 அழுகிய வாழைப்பழம், 2 அன்னாசிப்பழத் துண்டு மற்றும்; இவற்றை கலந்து வைக்க வேண்டும்.

**கால்நடை:**

கால்நடைகளை கோடைக்காலப் பராமரிப்பில் கலப்புத் தீவனத்துடன் 40 கிராம் என்ற அளவில் தாது உப்புக் கலவை 50 கிராம் உலர்ந்த ஈஸ்ட் அல்லது 150 கிராம் சோடியம் பை கார்பனேட் கலந்து கொடுக்கலாம்.

இதனால் கறவை மாடுகளுக்கு தோன்றும் வெப்ப அயர்ச்சி குறைக்கப்பட்டு பாலின் அளவு மற்றும் பாலில் உள்ள கொழுப்பு மற்றும் கொழுப்பு அல்லாத திடப்பொருட்களின் அளவும் அதிகரிக்கும்.